Genossenschaft **Netz** Soziale Ökonomie
பாசல் சமூக பொருளாதார வலையமைப்புக் கூட்டுறவு

தலைவர்: Isidor Wallimann, Blauensteinerstr. 11, 4053 Basel
செயலகம்: Claudia Studer, c/o AKB, Klingentalgraben 2, CH-4057 Basel

# பாசல் சமூக பொருளாதார வலையமைப்புக் கூட்டுறவின் மாற்றுப் பணம் (BonNetzBon)

## பாசல் சமூக பொருளாதார வலையமைப்புக் கூட்டுறவின் குறிக்கோள்கள்

பாசல் சமூக பொருளாதார வலையமைப்புக் கூட்டுறவானது, சமூகத்திற்கு பலன் தரும் வகையில் இயங்கும், சிக்கன பணநிர்வாகத்தினை ஊக்குவிக்கும் ஓர் உள்ளூர் அமைப்பாகும். ஆகவே, தற்போது முதலாளித்துவம் வாய்ந்த உலகச்சந்தையில் அனைத்து விடயங்களும் உலகமயமாக்கப்படுவதை இவ்வமைப்பு சந்தேகக் கண்களிலேயே பார்க்கின்றது. அதற்காகவே, உள்ளூர் வளத்தை ஆதரிக்கவும் பணவிரயத்தை நிரந்தரமாக தடுப்பதற்கும் BNB (அதாவது BonNetzBon) என்ற பணச்சீட்டு மாற்றுப் பணமாக வெளியிடப்படுகின்றது. இதைவிட இந்த அமைப்பு வேறு பல விடயங்களில் சமூகத்தின் நலனுக்காக பாடுபடுகின்றது.

பாசல் சமூக பொருளாதார கூட்டுறவானது ஜனநாயக ரீதியில் செயற்படும் ஒரு வலையமாகும். இதில் அங்கத்தவராக இருக்கும் ஒவ்வொரு அமைப்பும் வாக்குகளை அளிக்கலாம். ஜனநாயக அமைப்புகளே அங்கத்தவராக சேரலாம். ஒவ்வொரு அமைப்பிற்கும் ஒரு வாக்கு என்ற ரீதியிலேயே கையாளப்படும். அத்துடன் அனைத்து அமைப்புகளும் தமது தினசரி நடவடிக்கைகளை, அமைப்பின் குறிக்கோள்களிற்கு இணங்க நடாத்தவே முனைகின்றன. மக்கள் ஜனநாயக ரீதியில் நடாத்தும் நற்பணி அமைப்புகளும் (உதாரணத்திற்கு சங்கங்கள்) சரி, இலாப நோக்குடைய வியாபார, உற்பத்தி மற்றும் நுகர்வு நிறுவனங்களும் சரி (உதாரணத்திற்கு கூட்டமைப்புகள்) அங்கத்தவர் ஆகலாம்.
இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட கூட்டமைப்புகளாவன, வேலை அமர்த்தல், வேலைநீக்கம் மற்றும் மேலதிக பொருளாதாரம் சிக்கன முறையில் பயன்படுத்தப்படுவது போன்றவை அங்கத்தவர்களால் (அமைப்பிற்கும் ஒரு வாக்கு என்ற ரீதியில்) முடிவு செய்யப்படுவதை, அத்தாட்சிப்படுத்த வேண்டும்.
ஜனநாயக வலையமான பாசல் சமூக பொருளாதார வலையமைப்புக் கூட்டுறவு, ஜனநாயக ரீதியில் இயங்கும் நிறுவனங்களால் ஆனது. அந்த வகையில் மாற்றுப் பணத்தின் பாவனையை கவனித்து, ஓர் பக்குவமான பொருளாதார உபயோகத்தையும் ஊக்குவிக்கின்றது.

## பணச்சீட்டும் (BNB) அதன் பயன்களும்

- பாசல் சமூக பொருளாதார வலையமைப்புக் கூட்டுறவு மாற்றுப் பணமான BNB என்ற பணச்சீட்டை வெளியிடுகின்றது.
- BNB பணச்சீட்டு கடின பணம், அதாவது harte Währung அல்லது hard currency என்று அழைக்கப்படுகின்றது. இதனை சுவிஸ் பிராங்க் கொடுத்துப் பெற்றுக்கொள்ளவும் முடியும், அதே சமயம் இச்சீட்டினை சுவிஸ் பிராங்கிற்கு விற்கவும் முடியும்.

- இப் பணச்சீட்டு நாடுகடந்து செல்லுபடியாகும். இதனை பாசல் அருகாமையிலுள்ள, பிரான்ஸ் (எல்சாஸ்) மற்றும் ஜேர்மனி (பாடன்) சார்ந்த இடங்களில் புழக்கத்தலுள்ள, வேறு மாற்றுப் பணத்துடன் மாற்றம் செய்யலாம். அந்த வகையில் இதுவே மக்களாட்சியால் கட்டுப்படுத்தப்பட்ட (முதல்) சர்வதேச மாற்றுப் பணமாகும்.
- BNB பணச்சீட்டு போலியாக்கம் செய்யப்படுவதிலிருந்து தடுப்பதற்காக, பதிப்பிலும் அச்சிடுதலிலும் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.
- அத்துடன் இப் பணச்சீட்டுகள் காலாவதியாகும் திகதியுடன் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தொடராக வெளியிடப்படுகின்றன. பணச்சீட்டு காலாவதியாகிய பட்சத்தில், கட்டணமின்றி புதிய பணச்சீட்டை மாற்றி பெற்றுக்கொள்ளலாம். முதல் BNB பணச்சீட்டு வெளியீடு 2005ம் ஆண்டிலும், இரண்டாவது வெளியீடு 2007ம் வருடத்திலும் இடம்பெற்றது. இரு தொடர்களும் பாசல் சமூக பொருளாதார கூட்டுறவின் அங்கத்தவராக இருக்கும் அச்சகத்தினராலேயே வெளியிடப்பட்டன.
- நம்பிக்கை நிமித்தமும், எளிதில் பணமாக்கக்கூடிய வசதிக்காகவும், அனைத்து BNB பணச்சீட்டுகளும் 100% சுவிஸ் பிராங்குக்கு ஈடாக செல்லுபடியாகும். நிறுவனங்கள், வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியனர், BNB பணச்சீட்டை, பாசல் சமூக பொருளாதார வலையமைப்புக் கூட்டுறவிற்கு உள்ளேயும் வெளியேயும் பணத்தைப் போன்று உபயோகிக்கலாம்.

  இதன் பாவனையாளர்கள் www.viavia.ch/netzbon என்ற இணையத் தளத்தில் இலவச பெயர் பதிவும் விளம்பரமும் செய்துகொள்ளலாம்.
- பாசல் சமூக பொருளாதார வலையமப்புக் கூட்டுறவு BNB பணச்சீட்டை சிறு வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்துகின்றது. BNB வங்கிக் கடனானது, ஜனநாயக ரீதியில் பொதுமக்கள் நடாத்தும் நிறுவனங்கள் அல்லது கூட்டமைப்புகள் ஆரம்பிப்பதற்காக வட்டியில்லாமல் தரப்படுகின்றது. இக்கூட்டுறவில் அங்கத்தவராக இருப்பவர்கள், தம் நிறுவனங்களை விரிவுபடுத்தும்போதோ அல்லது குறிப்பிட்ட ஒரு திட்டத்தில் ஈடுபடும்போதோ BNB வங்கிக்கடனைப் பெற்றுக்கொள்ளலாம்.

## பாசல் சமூக பொருளாதார வலையமைப்புக் கூட்டுறவு அமைவதற்கு உந்து காரணங்களாக இருந்தவை யாவை?

- 1960 ஆம் ஆண்டிலிருந்து புதிய சமூக இயக்கங்கங்கள் மற்றும் அவற்றின் மாற்று பொருளாதார நிறுவனங்கள் சம்பந்தமான அடிப்படை கொள்கைகள்.
- ஸ்பெயின் நாட்டில் Mondragon இடத்திலிருக்கும், சுய நிர்வாகத்துடன் இயங்கும் கூட்டமைப்பு ஸ்தாபனங்களின் www.mcc.es என்ற கூட்டமைப்பு
- தொழில்மயமாக்கல் ஆரம்பமாகிய காலத்திலிருந்து, ஊழியர் சுய நிர்வாக இயக்கம்
- 19ம் மற்றும் 20ம் நூற்றாண்டில் எழுந்த ஆட்சியைக் கவிழ்க்கின்ற நோக்குடைய இயக்கங்களாகிய Proudhon மற்றும் Kropotkin
- „DAS ZEITALTER DER KNAPPHEIT“ und „SHORT CIRCUIT“ என்ற பெயரைக்கொண்ட நூல்கள்